# கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு – 4

## முதலாந் தவணைப் பரீட்சை – 2016

## தமிழ்மொழியும் இலக்கியமும் II

## தரம் - 11

சுட்டெண்:................................ நேரம் : 2 மணி

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **வினாத்தான் II இற்குறிய புள்ளிகள் 80 ஆகும்**

**01. சுருக்கமான விடை தருக.**

1) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
   போரெடுத்து வருமதன் முன்செலப்
2) சமூகம், சமுகம் என்ற சொற்களை அவற்றின் பொருள் புலப்படுமாறு தனித்தனி வாக்கியங்களிலே அமைத்துக் காட்டுக.
3) நேர்முக வருணனையாளன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய திறன்களுள் மிக அத்தியவசியமான இரண்டைத் தெரிவு செய்க.
   விடயம் பற்றிய முன் அறிவு, மனனம் செய்தல், பாவனை பண்ணுதல், பாடும் ஆற்றல், சமயோசிதமாப் பேசுதல்
4) பின்வரும் நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபடுத்தக.
   தலைமையுரை, தேசிய கீதம், வரவேற்புரை, நன்றியுரை, இறைவணக்கம், பிரதம விருந்தினர் உரை
5) "குறிஞ்சிக் குறத்தியரும், அரம்பையரும் கரும்பாம்பாட்டினார்" இங்கு கரும்பாம்பாட்டினார் என்ற தொடர் இருபொருளில் வந்துள்ளது. அதனை விளக்குக.
6) பறவைகள் பறந்தது. இவ்வாக்கியத்திலுள்ள வழு வகை யாது?
7) ஏவுகணை, வட்ட மேசை இவை இரண்டும் எத்தகைய தொகைகள் எனத் தருக.
8) "இப்ப ஏலாமனெ, நேரம் பெய்ட்டு, நாளராவக்கி சொல்ரன்." இவ்வாக்கியத்தை எழுத்து வழக்கில் எழுதுக.
9) பின்வருவனவற்றில் கருத்தில் வேறுபட்ட தொடர் எது?
   கிட்டத்தட்ட, ஏறத்தாழ, ஏறக்குறைய, திட்டவட்டமாக, கிட்டமுட்ட
10) உள்ளக் கமலடி உத்தமனார் வேண்டுவது. இப்பாடல் அடியில் உள்ள அணி யாது?

(10×2=20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலையங்கம் இடுக.

1) ஒருவன் ஏட்டுக் கல்வியினால் மட்டும் சிறந்த மனிதன் ஆகிவிட முடியாது. அவன் நற்பிரஜையாவதற்கு அறநெறிக் கல்வியும் மிக அத்தியவசியமாகின்றது. ஒழுக்கமில்லாத கல்வியை உடையவன் அணுக்குண்டுக்குச் சமனானவன். தற்கால மாணவர்கள் அறநெறிக் கல்வியில் நாட்டம் கொள்வதில்லை. மாணவர்களிடம் இருக்க வேண்டிய அன்பு, பணிவு, விட்டுக்கொடுப்பு போன்ற நற்பண்புகள் கேள்விக் குறியாகி உள்ளன. மாணவர்கள் அற ஒழுக்கப் போதனைகளைப் பின்பற்ற வேண்டும். அதற்காகப் பலரும் பாடுபட வேண்டும் என்பதை உள்ளடக்கிய கட்டுரை ஒன்று எழுதுக.

2) இன்று நம்நாட்டில் விளையாட்டுத் துறையில் பெருமளவு ஆர்வம் ஏற்பட்டுள்ளது. பல்வேறு விளையாடடுப் போட்டிகளிலும், எமது நாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் சாதனை புரிந்து வருகின்றனர். எமது நாட்டுக்குப் பேரும் புகழும் ஈட்டித் தந்தள்ளனர். இத்தகைய விளையாட்டுப் போட்டிகளில் போதிய பயிற்சியும், ஆர்வமும் பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். என்பதை வலியுறுத்தி நீர் மாணவர் மன்றத்தில் நிகழ்த்தும் சொற்பொழிவு.

3) இன்றைய இளைஞர்கள் இணையப் பாவனையால் சமுதாயத்தை சீரழிக்கின்றனர் என்ற கருத்தை ஆதரிக்கும் ஒருவருக்கும், அக்கருத்தை எதிர்க்கும் மற்றொருவருக்கும் இடையே இடம்பெறும் உரையாடல்.

4) அன்று அவள் நேரத்திற்கு முந்தியே நித்திரை விட்டு எழுந்து விட்டாள். ஏனோ மனம் சரியில்லை. உடலும் சோர்வாக, பதட்டமாக இருந்தது. கடவுள் வழிபாட்டை முடித்தக் கொண்டு, மனமில்லாமலே தன் கடமைகளைச் செய்து கொண்டிருந்தாள். அப்போது தான் அந்த தொலைபேசி அழைப்பு வந்தது………….. இதைத் தொடர்ந்து ஒரு சிறுகதை எழுதுக.

(25 புள்ளிகள்)

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

வாழ்க்கை என்பது ஊண், உடை, உறையுள் முதலியவற்றைத் தேடிப்பெறும் முயற்சியில் தொடங்குவது. சமைத்து உண்ணல், நெய்து உடுத்தல், வீடு அமைத்து வாழ்தல், தற்காப்புக்காக பற்பல கருவிகள் இயற்றிக் கொள்ளல் முதலியன வாழ்க்கையின் முதற்படியில் நிகழ்வன. அந்நிலையில் பொருளே வாழ்க்கையின் நோக்கமாகவும், நாட்டமாகவும் அமையும். பொருளால் அதாவது ஊண், உடை முதலியவற்றால் இன்பம் பெற முயன்று அலைந்து அலைந்து வாடிய பின், மக்கள் வாழ்க்கையின் இரண்டாம் படியினை எய்துவர். உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும், இருக்கும் இடத்திற்கும் போராட வேண்டிய வறுமையில் சிக்குண்டு வருந்தும் மக்கள் இரண்டாம் படியினை எய்தார். கஞ்சிக் கவலை மிகுந்த நாட்டில், கலைக் கவலை எழாது, கடவுட் கவலையும் தோன்றாது. பசித்துன்பம் அலைக்கும் நாடுபண்பாடு எய்தாது. வேண்டிய உணவைப் பெற்று, உடையும் பெற்று, இடம் முதலியனவும் பெற்றவரே இரண்டாம் படியினை எய்தும் தகுதி வாய்ந்தவர். தமிழ்ச் சான்றோர் ஊர்களைப் புகழத் தொடங்கிய போது மாட மாளிகைகளையும் பிறவும் பற்றிப் புகழ்ந்துரைத்தலில் ஊக்கங் கொள்ளாமல் ''பசி என்பது அறியா ஊர்கள்'' எனப் புகழ்ந்த திறன் போற்றத்தக்கது. ஆதலின் வறுமை அற்ற நாடே முன்னேற்றத்திற்கு தகுதியுற்ற நாடாகும். அந்நாட்டு மக்களே வயிற்று வாழ்வு என்னும் முதற்படியிலிருந்து கலை வாழ்வு எனும் இரண்டாம் படிக்கு உயர வல்லவர். ஏனையோர் கலை கலை என்று முழங்குதல் ஆரவாரமே அன்றிச் சிறிதும் பயன்படாதது. இரண்டாம் நிலை உற்ற மக்கள் வயிற்றுக் கவலை அற்றவராய், புலன்களுக்குச் சிறந்த விருந்து தேடி அவற்றின் வாயிலாக இன்பம் பெற முயல்வர். கண்ணுக்கு இனிய காட்சியாக ஓவியம், சிற்பம், நாடகம் முதலியன தேடுவர். செவிக்கு இனிய விருந்தான இசை, காவியம், கதை முதலியன நாடுவர். அவ்வாறே மற்றப் புலன்களுக்கும் ஏற்ற விருந்து விழைந்து தேடுவர். அந்நிலையில் கலை வளர்ச்சியே மக்களின் வாழ்க்கையாக அமையும்.

(10 புள்ளிகள்)

04. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த்தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

வறுமைப் புயலிற் சிக்கிவிடில்
வாழ்ககை தன்னை வெறுப்பதுவோ
சிறுமைக் குணமே நீ கொண்டு
சிரமே தாழ்ந்து செல்வதுவோ?

வறுமை பட்டே வாழ்ந்துலகில்
வளமும் புகழும் பெற்றுப்பின்
பெருமை பூண்டு வாழ்ந்திட்ட
பெரியோர் வாழ்க்கை பாட மடா.

இனபம் துன்பம் வாழ்வினிலே
இரவு பகலைப் போல் வருமே
துன்பம் அந்தோ மாய்ந்தோடும்
துணிவைத் துணிவாய்க் கொண்டாலே

1) சிறுமைக் குணம் எனக் கவிஞர் எதனைக் கருதுகிறார்?
2) நாம் எத்தகையோருடைய வாழ்க்கையைப் பாடமாகக் கொள்ள வேண்டும்.
3) எச்சந்தர்ப்பத்தில் துணிவைத் துணையாகக் கொள்ள வேண்டும்?
4) இப்பாடலிலுள்ள உவமை அணியினைத் தருக.
5) இப்பாடல் மூலம் எமக்கு கிடைக்கும் படிப்பினைகள் எவை?(இரண்டு தருக)

(5×2=10 புள்ளிகள்)

05. நீர் தமிழ் மன்றச் செயலாளர் என்ற வகையில் உமது பாடசாலையில் கொண்டாடப்பட்ட தமிழ்மொழித்தின விழா பற்றிய அறிக்கையை எழுதுக.

(15 புள்ளிகள்)

அல்லது

ஒக்டோபர் 1ம் திகதி உலக சிறுவர் தினம் கொண்டாடப்படுவது வழக்கமாகும். இத்தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் பற்றியும், சிறுவர் உரிமைகள் பற்றியும் விளக்கம் கேட்கும் உமது நண்பனுக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

(15 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education